செய்தி வெளியீடு எண்:573 நாள்:09.12.2016

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்குவது காவேரி டெல்டா பகுதி. இந்தப் பகுதியின் ஜீவ நாடியாக உள்ளது காவேரி நதிநீர். கர்நாடக மாநிலத்துடன் நமக்குள்ள காவேரி நதிநீர் பிரச்சனை பல ஆண்டுகளாக தொடர்ந்து வரும் பிரச்சனையாகும்.

காவேரி நடுவர் மன்றம் இறுதி ஆணையை 5.2.2007 அன்று பிறப்பித்தது. காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து, கர்நாடக, கேரள மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு முறையீட்டு மனுக்களை (Special Leave Petitions) தாக்கல் செய்தன. காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் தமிழகத்திற்கு பாதகமாய் உள்ள ஒரு சில பகுதிகளை, மேல் ஆய்வு செய்யக் கோரி, ஒரு சிறப்பு முறையீட்டு மனுவை உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது. இந்த மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்துவந்துள்ளன.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை செயல்முறைக்கு கொண்டுவருவதற்கு மத்திய அரசு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட சட்டப் போராட்டத்தின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற உத்தரவின்படி, மத்திய அரசு, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை 19.2.2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிட்டது. இதனால் தமிழ்நாட்டின் உரிமை நிலைநாட்டப்பட்டது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படி கர்நாடக அரசு, தமிழ்நாட்டிற்கு உரிய நீரை விடுவிக்க முன்வராத நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்றப் பேரவையில் **18.8.2016** அன்று அறிவித்ததற்கிணங்க, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படி தமிழ்நாட்டுக்குரிய பங்கு நீரை பெறுவதற்காக உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்று **22.8.2016** அன்று தாக்கல் செய்யப்பட்டது. இம்மனுவினை விசாரித்த உச்ச நீதிமன்றம், கர்நாடக அரசு, தமிழ்நாட்டுக்கு நீர் விடுவிப்பது குறித்து அவ்வப்போது ஆணைகளை வழங்கியது.

மாநிலங்கள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் **18.10.2016** அன்று விசாரணைக்கு வந்தபோது முதற்கட்டமாக இம்மனுக்களை விசாரிக்க உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளதா என்பது குறித்து உத்தரவு வழங்கப்பட வேண்டும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

தமிழ்நாடு அரசு, இந்த மேல் முறையீட்டு மனுக்கள் உச்ச நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்பட்டது என வாதிட்டது. மத்திய அரசு, இந்த மேல் முறையீட்டு மனுக்கள் உச்ச நீதிமன்றத்திற்கு உட்பட்டது அல்ல என வாதிட்டது. சம்பந்தப்பட்ட மாநிலங்களின் வாதங்களை கேட்டறிந்த பின்னர், உச்ச நீதிமன்றம் **19.10.2016** அன்று தீர்ப்பினை வழங்குவதற்காக வழக்கினை ஒத்திவைத்தது.

உச்ச நீதிமன்றத்தின், **3** நீதியரசர்கள் கொண்ட அமர்வு, **9.12.2016** அன்று வழங்கிய தீர்ப்பில், தமிழ்நாடு அரசின் வாதத்தினை ஏற்று, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு மனுக்கள், உச்ச நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்பட்டது என்றும், இந்த மேல் முறையீட்டு மனுக்கள் மீது மேலும் உத்தரவுகள் வழங்குவதற்காக **15.12.2016** அன்று பட்டியலிடுமாறும் ஆணையிட்டுள்ளது. மேலும், **18.10.2016** அன்று பிறப்பிக்கப்பட்ட இடைக்கால ஆணையானது, அதாவது கர்நாடக அரசு, நாளொன்றுக்கு வினாடிக்கு **2000** கனஅடிவீதம், தமிழ்நாட்டுக்கு நீரை விடுவிக்க வேண்டும் என்ற ஆணை தொடரும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

இது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அயராத முயற்சிகளுக்கு கிடைத்த மற்றுமொரு வெற்றியாகும்.

(எஸ்.கே.பிரபாகர்)
முதன்மைச் செயலாளர்
பொதுப்பணித் துறை

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**